| | | |
|---|---|---|
| PLACE | THIRUVELLARAI | 4 |
| PRESENT NAME | THIRUVELLARAI | |
| BASE TOWN | TRICHY | |
| DISTANCE | 20 KM | |
| MOOLAVAR | PUNDAREEKATCHAN | |
| THIRUKKOLAM | NINDRA | |
| THIRUMUGAMANDALAM | EAST | |
| UTHSAVAR | SENTHAMARAIKANNAN | |
| THAYAR | PANKAJAVALLI | |
| MANGALASASANAM | 24 PAASURAMS | |
| PRATYAKSHAM | GARUDAN,SIBI,MARGANDEYAR | |
| THEERTHAM | DIVYA GANDA SHEERA | |
| VIMANAM | VIMALAKRUTHI VIMANAM | |
| NAMAVALI | Sri Rakthapankajavalli nayiga sameda Sri pundareekatcha parabramane namah | |



| திவ்யதேசம் 004<br>திருவெள்ளறை (திருவெள்ளறை) | |
|---|---|
| பெரியாழ்வார் | 71,192-201 |
| திருமங்கையாழ்வார் | 1368-77,1851,2673(70),2674(117) |
| மொத்த பாசுரங்கள் | 24 |

### பெரியாழ்வார்

71 உன்னையும் ஒக்கலையிற் கொண்டு தம் இல் மருவி
உன்னொடு தங்கள் கருத்து ஆயின செய்து வரும்
கன்னியரும் மகிழ கண்டவர் கண்குளிர
கற்றவர் தெற்றிவர பெற்ற எனக்கு அருளி
மன்னு குறுங்குடியாய் வெள்ளறையாய் மதில் சூழ்
சோலைமலைக்கு அரசே கண்ணபுரத்து அமுதே
என் அவலம் களைவாய் ஆடுக செங்கீரை
ஏழ் உலகும் உடையாய் ஆடுக ஆடுகவே (8)

### காப்பிடல்

192 இந்திரனோடு பிரமன் ஈசன் இமையவர் எல்லாம்
மந்திர மா மலர் கொண்டு மறைந்து உவராய் வந்து நின்றார்
சந்திரன் மாளிகை சேரும் சதுரர்கள் வெள்ளறை நின்றாய்
அந்தியம் போது இது ஆகும் அழகனே காப்பிட வாராய் (1)

193 கன்றுகள் இல்லம் புகுந்து கதறுகின்ற பசு எல்லாம்
நின்றொழிந்தேன் உன்னைக் கூவி நேசமேல் ஒன்றும் இலாதாய்
மன்றில் நில்லேல் அந்திப் போது மதிற் திருவெள்ளறை நின்றாய்
நன்று கண்டாய் என்தன் சொல்லு நான் உன்னைக் காப்பிட வாராய் (2)

194 செப்பு ஓது மென்முலையார்கள் சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு
அப்போது நான் உரப்பப் போய் அடிசிலும் உண்டிலை ஆள்வாய்
முப் போதும் வானவர் ஏத்தும் முனிவர்கள் வெள்ளறை நின்றாய்
இப்போது நான் ஒன்றும் செய்யேன் எம்பிரான் காப்பிட வாராய் (3)

195 கண்ணில் மணல்கொடு தூவிக் காலினால் பாய்ந்தனை என்று என்று
எண் அரும் பிள்ளைகள் வந்திட்டு -இவர் ஆர்?- முறைப்படுகின்றார்
கண்ணனே வெள்ளறை நின்றாய் கண்டாரொடே தீமை செய்வாய்
வண்ணமே வேலையது ஒப்பாய் வள்ளலே காப்பிட வாராய் (4)

196 பல்லாயிரவர் இவ் ஊரில் பிள்ளைகள் தீமைகள் செய்வார்
எல்லாம் உன்மேல் அன்றிப் போகாது எம்பிரான் நீ இங்கே வாராய்
நல்லார்கள் வெள்ளறை நின்றாய் ஞானச் சுடரே உன்மேனி
சொல் ஆர வாழ்த்தி நின்று ஏத்திச் சொப்படக் காப்பிட வாராய் (5)

197 கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல் கரு நிறச் செம் மயிர்ப் பேயை
வஞ்சிப்பதற்கு விடுத்தான் என்பது ஓர் வார்த்தையும் உண்டு
மஞ்சு தவழ் மணி மாட மதிற் திருவெள்ளறை நின்றாய்
அஞ்சுவன் நீ அங்கு நிற்க அழகனே காப்பிட வாராய் 6

198 கள்ளச் சகடும் மருதும் கலக்கு அழிய உதைசெய்த
பிள்ளையரசே நீ பேயைப் பிடித்து முலை உண்ட பின்னை
உள்ளவாறு ஒன்றும் அறியேன் ஒளியுடை வெள்ளறை நின்றாய்
பள்ளிகொள் போது இது ஆகும் பரமனே காப்பிட வாராய் (7)

199 இன்பம் அதனை உயர்த்தாய் இமையவர்க்கு என்றும் அரியாய்
கும்பக் களிறு அட்ட கோவே கொடுங் கஞ்சன் நெஞ்சினிற் கூற்றே
செம்பொன் மதில் வெள்ளறையாய் செல்வத்தினால் வளர் பிள்ளாய்
கம்பக் கபாலி காண் அங்கு கடிது ஓடிக் காப்பிட வாராய் (8)

200 இருக்கொடு நீர் சங்கிற் கொண்டிட்டு எழில் மறையோர் வந்து நின்றார்
தருக்கேல் நம்பி சந்தி நின்று தாய் சொல்லுக் கொள்ளாய் சில நாள்
திருக்காப்பு நான் உன்னைச் சாத்த தேசு உடை வெள்ளறை நின்றாய்
உருக் காட்டும் அந்தி விளக்கு இன்று ஒளி கொள்ள ஏற்றுகேன் வாராய் (9)

201 போது அமர் செல்வக்கொழுந்து புணர் திருவெள்ளறையானை
மாதர்க்கு உயர்ந்த அசோதை மகன்தன்னைக் காப்பிட்ட மாற்றம்
வேதப் பயன் கொள்ள வல்ல விட்டுசித்தன் சொன்ன மாலை
பாதப் பயன் கொள்ள வல்ல பத்தர் உள்ளார் வினை போமே (10)

### திருமங்கையாழ்வார்

### திருவெள்ளறை

1368 வென்றி மா மழு ஏந்தி முன் மண்மிசை மன்னரை மூவெழுகால்
கொன்ற தேவ!-நின் குரை கழல் தொழுவது ஓர் வகை எனக்கு அருள்புரியே-
மன்றில் மாம் பொழில் நுழைதந்து மல்லிகை மௌவலின் போது அலர்த்தி
தென்றல் மா மணம் கமழ்தர வரு திருவெள்ளறை நின்றானே (1)

1369 வசை இல் நான்மறை கெடுத்த அம் மலர் அயற்கு அருளி முன் பரி முகமாய்
இசை கொள் வேத-நூல் என்று இவை பயந்தவனே!-எனக்கு அருள்புரியே-

உயர் கொள் மாதவிப் போதொடு உலாவிய மாருதம் வீதியின்வாய
திசை எலாம் கமழும் பொழில் சூழ் திருவெள்ளறை நின்றானே (2)

1370 வெய்யன் ஆய் உலகு ஏழ் உடன் நலிந்தவன் உடலகம் இரு பிளவாக்
கையில் நீள் உகிர்ப் படை-அது வாய்த்தவனே!-எனக்கு அருள்புரியே-
மையின் ஆர்தரு வரால் இனம் பாய வண்தடத்திடைக் கமலங்கள்
தெய்வம் நாறும் ஒண் பொய்கைகள் சூழ் திருவெள்ளறை நின்றானே (3)

1371 வாம் பரி உக மன்னர்-தம் உயிர் செக ஐவர்கட்கு அரசு அளித்த
காம்பின் ஆர் திரு வேங்கடப் பொருப்ப!-நின்காதலை அருள் எனக்கு-
மாம் பொழில் தளிர் கோதிய மடக் குயில்வாய்-அது துவர்ப்பு எய்த
தீம் பலங்கனித் தேன்-அது நுகர் திருவெள்ளறை நின்றானே (4)

1372 மான வேல் ஒண் கண் மடவரல் மண்-மகள் அழுங்க முந்நீர்ப் பரப்பில்
ஏனம் ஆகி அன்று இரு நிலம் இடந்தவனே!-எனக்கு அருள்புரியே-
கான மா முல்லை கழைக் கரும்பு ஏறி வெண்முறுவல் செய்து அலர்கின்ற
தேனின் வாய் மலர் முருகு உகுக்கும் திருவெள்ளறை நின்றானே (5)

1373 பொங்கு நீள் முடி அமரர்கள் தொழுது எழ அமுதினைக் கொடுத்தளிப்பான்
அங்கு ஓர் ஆமை-அது ஆகிய ஆதி!-நின்அடிமையை அருள் எனக்கு-
தங்கு பேடையோடு ஊடிய மதுகரம் தையலார் குழல் அணைவான்
திங்கள் தோய் சென்னி மாடம் சென்று அணை திருவெள்ளறை நின்றானே (6)

1374 ஆறினோடு ஒரு நான்கு உடை நெடு முடி அரக்கன்-தன் சிரம் எல்லாம்
வேறு வேறு உக வில்-அது வளைத்தவனே!-எனக்கு அருள்புரியே-
மாறு இல் சோதிய மரகதப் பாசடைத்தாமரை மலர் வார்ந்த
தேறல் மாந்தி வண்டு இன் இசை முரல் திருவெள்ளறை நின்றானே (7)

1375 முன் இவ் ஏழ் உலகு உணர்வு இன்றி இருள் மிக உம்பர்கள் தொழுது ஏத்த
அன்னம் ஆகி அன்று அரு மறை பயந்தவனே!-எனக்கு அருள்புரியே-
மன்னு கேதகை சூதகம் என்று இவை வனத்திடைச் சுரும்பு இனங்கள்
தென்ன என்ன வண்டு இன் இசை முரல் திருவெள்ளறை நின்றானே (8)

1376 ஆங்கு மாவலி வேள்வியில் இரந்து சென்று அகல்-இடம் முழுதினையும்
பாங்கினால் கொண்ட பரம!-நின் பணிந்து எழு வேன் எனக்கு அருள்புரியே-
ஓங்கு பிண்டியின் செம் மலர் ஏறி வண்டு உழிதர மா ஏறித்
தீம் குயில் மிழற்றும் படப்பைத் திருவெள்ளறை நின்றானே (9)

1377 மஞ்சு உலாம் மணி மாடங்கள் சூழ் திருவெள்ளறை-அதன் மேய
அஞ்சனம் புரையும் திரு உருவனை ஆதியை அமுதத்தை
நஞ்சு உலாவிய வேல் வலவன் கலி கன்றி சொல் ஐஇரண்டும்
எஞ்சல் இன்றி நின்று ஏத்த வல்லார் இமையோர்க்கு அரசு ஆவர்களே (10)

1851 துளக்கம் இல் சுடரை அவுணன் உடல்

பிளக்கும் மைந்தனைப் பேரில் வணங்கிப் போய்
அளப்பு இல் ஆர் அமுதை அமரர்க்கு அருள்
விளக்கினைச் சென்று வெள்ளறைக் காண்டுமே (4)

### சிறிய திருமடல்

2673 மதிள் கச்சி ஊரகமே பேரகமே
பேரா மருது இறுத்தான் வெள்ளறையே வெஃகாவே (70)

### பெரிய மடல்

2674 மின்னை இரு சுடரை வெள்ளறையுள் கல் அறைமேல்
பொன்னை மரகதத்தை புட்குழி எம் போர் ஏற்றை (117)